DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 21/2026** |
| Deposition of Witness for | : | **P.W. 2** |
| Name | : | **மருதுபாண்டி** |
| Father's Name | : | **சீனி** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரிகள் 1, 2, 3, 5, மற்றும் 6 வரை ஆஜர். 4-ம் எதிரி ஆஜர் இல்லை. 4-ம் எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 09.06.2026

**<u>முதல் விசாரணை:</u>**

நான் தற்போது அல்லூரில் குடியிருந்து ஆட்டோ ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ராஜபாண்டி எனது அண்ணன் ஆவார், பாண்டி, உடையார், போஸ் ஆகியோர்களை தெரியும். வழக்கு சம்மந்தமாக எனக்கு தெரியாது. எனது அண்ணன் எதிரிகள் மீது கொடுத்த புகார் சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. அந்த நேரத்தில் நான்வெளியூரில் இருந்தேன். போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

WEB COPY

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை :**

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் நாங்களும் எதிரிகளும் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றும் எங்களது சமுதாய சங்கம் தொடர்பாக போர்டு வைப்பதில் எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது என்றும் அதன் தொடர்பாக எதிரி முத்துக்கிருஷ்ணன் மற்றும் அவரது கூட்டாளிகளுடன் சேர்ந்து எங்களை அசிங்கமான வார்த்தைகளால் திட்டி, எனது அண்ணன் வைக்கோர் போரை தீ வைத்து எரித்துவிட்டார்கள் என்றும் இதே போல் எங்கள் ஊரைச் சேர்ந்த உடையார், பாண்டி ஆகியோரின் ஆட்டுக்கொட்டகையை தீ வைத்து எரித்தார்கள் என்றும் மேற்படி எதிரிகளை கையும் களவுமாக பிடிக்கவேண்டி 26.07.2017ம் தேதி அதிகாலை 4.00 மணியளவில் நானும் எனது அண்ணனும் மற்றவர்களும் கண்காணித்து கொண்டிருந்தபோது எதிரிகள் அனைவரும் சிகரெட் பத்த வைக்கும் லைட்டரால் எனது அண்ணன் வீட்டுக் கொட்டத்தில் உள்ள ஓலையில் தீ வைத்து எரித்தார்கள் என்றும் நானும் என் அணணன் மற்றும உடன் இருந்தவர்கள் சத்தம் போட்டவுடன் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள் என்றும் எதிரிகள் எங்களை பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டி கொலை மிரட்டல் செய்தார்கள் என்றும் எனது அண்ணன் தனது புகார்மனுவிலும் நான் எனது போலிசார் விசாரணையிலும் தெரிவித்துள்ளோம் என்றால் சரியல்ல. தற்போது நானும் எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டோம் என்றால் சரியல்ல. தற்போது வேண்டுமென்றே எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:** இல்லை

**மறு விசாரணை:** இல்லை

**/ஒம்./ சு.மோகன ரம்யா,**

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**

**சிவகங்கை.**

WEB COPY